DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 20/2024** |
| Deposition of Witness for | : PW 10 |
| Name | : டாக்டர்.செந்தில்சேகர் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th March 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் சாட்சி தானாக அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். அந்த மருத்துவமனையில் 21.01.2014ம் தேதி காலை 9.30 மணியளவில் 40 வயது மதிக்கத்தக்க பூமாரி என்பவர் அவர் பணிபுரியும் சிரஞ்சீவி மேட்ச் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தன் மேலாளர் ஜெகநாதன் என்பவரால் அழைத்து வரப்பட்டார். பூமாரி சிகிச்சைக்கு அழைத்து வரப்படும்போது சுயநினைவின்றி காணப்பட்டார். அவரை அழைத்து வந்த நபர் பூமாரிக்கு பணியில் இருந்தபோது அதே நாளில் காலை 8.00 மணியளவில் கம்பரசர் மோட்டரில் தவறிவிழுந்ததால் காயம் ஏற்பட்டதாக கூறினார். பூமாரியை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. முதுகின் வலது மேல்பகுதியில் 20x15 செமீ x சதை, ரத்தநாளங்கள் அளவில் சிதைவுக்காயம் காணப்பட்டது. அந்த சிதைவுக்காயம் ரத்தக்கசிவுடன் காணப்பட்டது.

அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்தேன். அவருக்கு 2 யூனிட் ரத்தம் வழங்கப்பட்டது. மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அவரை பரிந்துரை செய்து அனுப்பிவைத்தேன். **பூமாரியின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறியுள்ள காயத்தை தவிர்த்து வேறு காயங்கள் எதுவும் பூமாரியின் உடம்பில் காணப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**